Registered at the G. P. O. AS A NEWSPAPER

# சன்மார்க்கபோதினி

பத்திர விலைவிகிதம்.
முக்குருபா உ-உடு.
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் எடு
இந்தியாவுக்கு சதம் எடு
பிறதேசங்களுக்கு எடு

# SANMARKA POTHINI

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குசதம் க
௪0 க்குமேல்ஒருவரிக்கு
உ0 க்குமேல்..........
இணைப்பிரசுரமொவ்வொ
ன்றிற்கும் 3—க்ஒன்ற

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்.

VOL. XXXVI. JAFFNA SEPTEMPER 30 th No. 17

கசும் புத்தகம். யாழ்ப்பாணம் கக௨0 ம் ஞூ புரட்டாசி மீ ௩0 உ வியாழக்கிழமை. சங்கியை கஎ

LIBRARY 2 10 1995 UNIVERSITY OF JAFFNA

## மதுபானக்கெடுதி.

இது நம்மூரை மாத்திரமல்ல இந்தியாவையும் கெடுத்துவருகிறது. இதைக்குறித்து இந்திய பத்திராதிபர் ஒருவர் எழுதும்போது, இந்தியாவின் ஒவ்வொரு பட்டினத்திலும் 20 அல்லது 25 கடைகளிருக்குமென்று வைத்துக்கொண்டால் இந்தியாமுழுதும் இரண்டிலட்சங்கடைகளிருக்குமென்றும், இவைகளை ஒருங்கேசேர்த்து 20 அடி தூரத்துக்கொன்றாய் ஓர் வீதியின் இருபக்கங்களிலும் அமைத்தால் [illegible]0 மைல் நீளமாயிருக்குமென்றும் அ[illegible] ழியே குடியரெல்லாம் அவர்க[illegible] த்தாருடன் ஐவைந்துபேரா[illegible] ல் 570 மைல்தூரம் பரவி[illegible] றும், சாராயக்கடைக்காய்ச்[illegible]0 லட்சம் ஆண் பெண்கள் [illegible]0 மையில் கடந்தால் இவ்வீதி[illegible] ருமாசஞ்செல்லுமென்றும், இன்னும் பலவிநோதகணக்குகளைப்பூட்டிப் பரிதபிக்கிறார்.

இந்தியாவில் 33 பிரபல அங்கிலேய டாக்டர்கள்சேர்ந்து கொக்கெயின், அபின், கஞ்சா சாராயம் முதலிய லாகிரிவஸ்துக்கள் விஷத்தன்மையுடையன என்றும், அதை நீக்கினவர்கள் பலசாலிகளாயும் தொற்றுநோய்களால் வருவிற் பிடிக்கக்கூடாதவர்களாயுமிருப்பார்களென்றும், ஸ்திரீ புருஷசம்பந்தமான மேகரோகங்களுக்கும் சாராயசத்து காரணமாயிருப்பதால் அது பிற்சந்ததிக்குங் கேடுவிளைக்குமென்றும், அதனுல் பஞ்சம் அதிகரிக்கிறதென்றும், சுரத்தால் விருத்தியாகும் கிருமிகளை உற்பத்தியாகும் கிருமிகளையும், அதையடுத்த ரோகங்களையும் தடுப்பதற்காக இயற்கையாய்ச் சரீரத்திலமைந்துள்ள சக்தியைக் குறைத்துவிடுகிறதென்றும், இதைபடியுடன்விலக்கி மற்றவர்களையும் விலக்கும்படி தூண்டவேண்டுமென்றுங் கேட்டிருக்கிறார்கள். இனியாவது இதை முற்றிலுந்தடுக்க அரசினர் முன்வரப்படாதா?

இஃதன்றி 'சர்வவியாபி'யில் "கி. ஆர் நசாமி" என்பவர் எழுதும் விஷயமும் நம்மவர்க்குப் பயன்படுமாதலால் இடவசதிநோக்கி அதன்சாரத்தைமாத்திர மிதன் கீழ்த்தருகிறோம்.

"வெறிக்கக்குடிப்பவர் விலங்குக்குக்கீழாய் அறிவையிழப்பர் அறி" என்பது நாயனுர்திருக்குறளிலொன்று. போதைவஸ்துகள் அருந்துதல் ஆகாது. அதையேன் அருந்துகிறீரென்று கேட்டால், கிறைக்கும், தலைவலிக்கும், அசீரணத்துக்குமா அநுசரிக்கிறேமென்பவர். மருந்தல்லவா வியாக்நதவும்! லாகிரிவஸ்துக்களைஉண்டால் தலைவலிக்குமா? பகலில் சரீர அப்பியாசஞ்செய்தால் இரவில் நித்திரைவராதா? சீரணிக்காதா? "பழக்கக்கொடியதுபார் பாறையினுங்கோழி, கிழிக்கும்பொலியைக் கிளறும்" என்பதற்கிணங்க இது பழக்கத்தாற்செய்யுங்காரியமாயிருக்கிறது. கோழி குப்பையைக்கிளறிஇரைதேடிவருவதுபோல்கற்பாறையிலுந்தேடுதல் அநுபவம். மனிதனே ஆறறிவுள்ளவன். அவன் ஐந்தறிவுள்ளவிலங்குகட்குக் கீழ்ப்பட்டிருக்கலாமா? அவ்வித விலக்கறிவுண்டுகொருமுண்டென்பதற்கதாட்சியாய் வேதசாஸ்திரங்களிலேயும் "நரிநாய்ப்பறவைகுழாமு வழியிற்கடந்தபிணமதனை, உரியாசிவன்றிகொட்டுக்குண்கொண்டேகிக் கட்டையில்வைத், தெரியாதேறன் பிணம்விழித்திறின்றேன் மயக்கென்பம்மிமெய்க்கான, அரியையவிக்குமுன்னரொக் தயர்கட் கடையிற்புகுந்தனவே, என்று கூறினுர்.

அதாவது நரிநாய்ப்பறவைமுதலியவற்றூற் சூழப்பெற்ற ஓர் சவத்தைக்கண்டு அதற்குரியவரொருமில்லையென்றுகண்டு அவ்விலங்குகளை விலக்கி அதைச்சுடுகாட்டிற்கொண்டுபோய்த் தீ மூட்டியபோது அப்பிணம் விழித்து இது இன்றைக்கெனக்கேன் ஏதோ மயக்கமா யிருந்ததென்று சொல்லிக்கொண்டு அவர் தீயையணைத்துவருவதற்குமுன் அருகிலிருந்த கள்ளுக்கடையிற் புகுந்ததும். இதுவே இப்பாவின்சாரம். இதனுல் பழங்கொடியதெனவே ஏற்படுகிறது.

வெறிக்கக்குடிப்பவர்அன்றிச் சாறுவாய் உண்போரும் அவ்விதமாகாரென்று சந்தேகிக்கவேண்டாம். "சிறுதுளியன்றோ பெருவெள்ளம்" பெரும்வெள்ளமானபின் அதன் மகத்துவம் யார்க்குக்தெரியாது. அப்படியே நாளுக்குநாட் கொஞ்சங்கொஞ்சமாய்க் குடித்துவந்து வெறிக்கக்குடிக்கலாம். அப்படி வெறிக்கக்குடித்தால் விலைமாதர்க்குத் தம் பொருளெல்லாம் செலவிட்ட ஒருவனை உலகம் நிந்திப்பதுபோல இவனையும் நிந்திக்கும். இப்படியருந்தஅருந்த ஒருவிதப்பிரியங்கொடுத்து அதற்கேற்பக் கறிபதார்த்தங்களை முஸ்திப்புச்செய்து காலுபேரைக்கூட்டிக் கொழுக்கத்தின்று போசனப்பிரியராய் "ருசிகண்டபூனை உறியைத்தாவும்" என்றபடி ஒருநாளைக்குக் கிடைக்காவிட்டால் மனவியாகுலமடைந்து இல்லாதகொடுமையால் எல்லோரையும் புறக்கணித்து ஒருவரையொருவர் எதிர்பார்த்துஞ் சரிப்படாமல் அடுத்தவீட்டுக்காரனிடம் கடன்வாங்கிச் கடைக்குப்போகச்சொல்லும். ஒருவர்விருந்துக்கழைத்தால் ஓடிப்போகச் சொல்லும். பகுத்தறிவு பறந்துபோகும். இதனுலேயே மனிதனுக்கும் விலங்குக்கும் வேற்றுமையுண்டாயினும் அதுஅற்றுப்போக மனிதர் மிருகங்களாகின்றார். என்கிறர்.

## மதுவால்வருங்கேடு.

(தித்திக்குந்திவ்வியவாக்கு என்றமெட்டு)

பல்லவி.

கள்ளுக்குடியாதேபாவீ—ஓ!
கடிதில்வந்திடும்மூதேவி—நீ ... கள்

அநுபல்லவி.

கொள்ளிவைத்தன்னியே
கொழுந்துவிட்டெரியவே
கொடுங்கனவிடலாமோ ... கள்

சரணங்கள்.

கா்ணும்பெண்கள்விரன
கண்டமிர்கம்வெருள
கண்ணுக்கெரியாதிருள
நாணமின்றியுடையும்
நழுவிடவுங்கடையும்
காற்பக்கங்கட்குமிடையும் ... கள்

பெண்டிர்கொட்டாவிவிடப்
பிள்ளைபழுதாகிட
பேத்தைபோல்வயிறுதிட
கண்டவர்களின்தோளில்
கையிட்டுஓர்காளில்
கனசண்டைசெய்வாய்பாழில் ... கள்

காசுக்குத்தட்டுக்கெட்டால்
கடனுங்கிடையாவிட்டால்
களவெடுப்பாயேமுட்டால்
ஆசைவெட்கமறியா
அடங்காமிகுவெறியா
லறிவுகெடுதல்கெறியா ... கள்

வாயாலேதம்பியூதி
மணமெழுந்திடவீதி
வந்தாலென்மரியாதி
ஓயாக்குடியர்பாடு
ஓதுங்கிடுஞ்சுடுகாடு
ஓ! இதைவிட்டுப்போடு ... கள்

குடிவெறிமிகுவீறு
கொளின்நடைதாறுமாறு
குறைந்தாற்றயிலேபேறு
அடிதலைதெரியாமல்
அறைவதும்பிரியாமல்
அலைவுற்றுத்திரியாமல் ... கள்

## நிலாவரை நீர்ப்பாய்ச்சல்.

நிலாவரை அச்சுவேலிக் கோயிற்பற்றிலுள்ளதென்பது பழைய பூமிசாஸ்திரங்களில் காணப்படுகிறது. தற்காலம் அதைப் புத்தூருக்காக்கி விட்டார்கள். ஆகவே புத்தூர் நீர்ப்பாய்ச்சலென்றும் பெயர்கொடுத்துவிட்டார்கள். அதனுல் நமக்கொன்றுமில்லை அதை நீர்ப்பாய்ச்சிறுல் தண்ணீர்வரி கொடுக்கக்கூடுமோ என்று ஊரவரைக்கேட்க அவர் இணங்கவில்லையென்று அரசினர் அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டார்களாம்! இது உண்மையா? இதையே புனராலோசனை செய்யவேண்டும். அத்தருணம் நாம் விசாரித்தபோது எவரேனும் தண்ணீர்வரிகொடுக்கப் பின்னிற்கவில்லை. அப்படித்தெரிவிக்கப்பட்டிருப்பின், அது அக்கால மணியகாரரின் செய்கையாயிருக்கலாம். புத்தூரில் சொந்தக்காணியற்றபலர் தனவந்தரின் காணிகளில் குடியிருந்து சீவிப்பதால் அவர்களுக்கு வேலைகாரரால் குறைவில்லை. தானியத்தால் குறைவில்லை. மிகுதியை வேலைகாரருக்கே கொடுத்து லாபம்பெறுவார்கள்! அதன்நிமித்தம் அந்தரங்கத்தில் எவரேனும் தடைசொல்லி யிருக்கலாமோ தெரிக்கிலது. இதைக்கேட்ட மிகுதிப்பற்றுன கமக்காரர் தன்புறுகிறர்கள். புத்தூர்மாத்திரமல்ல அச்சுவேலியும் அதனுடன் சேர்க்கப்படவேண்டும். வடக்கே சமீபத்திருக்கும் செம்பாடுகளும் விளைநிலங்களாகில் ஏராளமான தானியத்தைக்கொடுக்கும். கிழக்கே உப்பாற்றுவாய்க்காலைத் தாண்டிவிட்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சக்கூடும். அங்கே மிகுதியாயுள்ள முடிக்குரிய காணிகளுக்கும் மானமுண்டாகும். இப்படியிருக்க அரசினர் முழங்கையைப்பிடித்தவன்போன்று ஆரைபோகவிட்டுவிட்டுப் பரோபகாரமான விசேஷமுயற்சியைக் கைவிட்டுவிட்டார்கள். இங்கே நீர்ப்பாய்ச்சலுண்டானுல் குடியேற்றவேண்டியதில்லை. ஆஸ்பத்திரிகட்டவேண்டியதில்லை. வீடுகட்டிக்கொடுக்கவேண்டியதில்லை. கிணறுவெட்ட வேண்டியதில்லை. எருமைமாடு வாங்கிக்கொடுக்கவேண்டியதில்லை. முற்பணம் செய்கைக்காய் விடவேண்டியதுமில்லை. நீரை மேலேற்றிப் பாய்ச்சிவிட்டால்போதும்! அரசினருக்கு முன் அவ்வளவு அக்கறையிருந்ததில்லைப் போலும்! தற்போது அக்கறை காட்டிவரும் காலத்தாவது இதை நினைத்தார்களில்லை. இதைக்குறித்து சில நாட்களின்முன் கௌரவ பாலசிங்கம் அவர்கள் விபரமான நீண்ட பிரசாரணங்கூறியும் இராசமாவிதர் மேலேசொன்ன சாட்டைக்கூறி அது பிரயோசனப்படாதென்றாராம்.

ஆனுல் அச்சாட்டு உண்மையானதென்று நாம ஒப்புக்கொள்ளவில்லை. வேண்டுமானுல் அரசாட்சி ஏசன்றர் கேரில்வந்து புத்தூர் வங்களாவில் சம்மதி கேட்கலாம்! யாழ்ப்பாணத்தாருள் பெரும்பாலார் அடுப்பைச்சுற்றிய கோழிபோல்நிற்பது உண்மையாதலால் கௌரவ பிரதிநிதியவர்கள் மீண்டும் முயற்சித்து இப்பரோபகார முயற்சியில் யாவரும் பலனடையும்படி செய்வாரென நாம் காத்திருக்கிறோம்.

கையொப்ப வரவு.

மானிப்பாய்.

ஸ்ரீ. ஆ. வேலுப்பிள்ளை ரூபா. 3-0⁰

## யாழ்ப்பாணம்.

ஊர்ச்சேர்—போதிய மழையில்லை. பலவிடங்களுக்கு மழை அவசரத்தேவையாயிருக்கிறது. சரக்கங்களுக்குக் குறைவில்லை. புரட்டாசிதசென்றதுதொடங்கிவிட்டது. வடமராட்சியில் பிளேக்குமென்று கதைபுகைகிறது.

### மதுவிலக்குச் சங்கத்தாரின் அநுகூலம்.

யாழ்ப்பாண மத்தியமதுவிலக்குச்சங்கத்தார் பெருமுயற்சிசெய்து நம்முரைப்பாழாக்கும் மதுபானத்தவரணைகளை எடுக்கும்படி பிரயாசப்பட்டார்கள். அவர்கள் முயற்சியாலும் ஊரவரின் நல்லெண்ணத்தினுலும் பல தவரணைகள் எடுபட்டன. இம்முறையும் 100-க்கு 75 வீதமானேரின் சம்மதிகிடைக்குமென்று நம்பிச் சம்மதிகேட்கும்படி கியமிக்கப்பட்ட தவரணைகள் ஐம்பது. அவற்றுள் 10 சாராயத்தவரணைகளும் 40 கள்ளுத் தவரணைகளுமாம். ஷெ சங்கத்தாரோலத்திற்கு அரசாட்சியார் முன் அதிகங் கரிசனைகாட்டாதிருந்தும் இம்முறை கேட்டவற்றுள் 33 கள்ளுத்தவரணைகளையும் 5 சாராயத்தவரணைகளையும் சம்மதிகேளாமலே எடுக்க உடன்பட்டார்கள். அதைக்குத்து மதுபரிபாலன உதவிக் கொமிஷனர் மெஸ். பாஷன் அவர்கள் மதுவிலக்குச் சங்கத்து உப அக்கிராசனர் ஸ்ரீ. N. செல்வத்துரையவர்களுடன் பேசினர்.

அதற்குமுதலே அவரை நாம் அக்கிராசனராய்க்கொண்டு 18௳ சனிக்கிழமை சாயந்தரம் நம்மூராரைச்சேர்ந்தஅச்சுவேலி ஆங்கில வித்தியாசாலையில் ஓர்கூட்டம்வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்விதமே அக்கிராசனர்வந்து சபையாரால் உபசரிக்கப்பட்டார். அவரதுஆரம்பபாஷிதத்தில் மதுவால்விளையுந்தீமைகளை நன்குவிளக்கிப் பேசியபின் அரசினரின் தீர்மானத்தையும் கமிஷனரின் கேள்வியையும் விபரித்து அரசினரின் கேள்விக்கு இசைவதோ இசையாமையோ நல்லதென்பதைக் குறித்துத் தீர்மானிக்கும்படியும், அப்படிநீக்கில்அச்சுவேலியில்இரண்டுகள்ளுத்தவரணைகளிருப்பதால் ஒன்றைஎடுக்கக்கமிஷனர்உடன்பட்டிருக்கிறார்,அவற்றுள்எதைநீக்குவோமென்றுதீர்மானிக்கும்படியுங் கேட்டார். அதற்கு மெஸ். ச. சின்னத்தம்பியவர்கள்எழுந்துஅரசினர்கேள்விக்கு இம்முறைஇடங்கொடுப்ப

### நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருத்திறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் திறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணுகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால் கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல் உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானுல் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.




ஒரு புட்டி விலை, ரூபா. .... 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .... 10 8 0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆண்டப்பிலியு. ஏச். நல்லர் துரையவரிடத்திலும் கிடைக்கும்.

தேசுலமென்றும், அச்சுவேலித்தவறணையே பெருத்தகட்டத்திற்கிடமாயிருப்பதால் அதையே முக்கியப்படுத்தல்வேண்டுமென்றும் பிரேரித்தார். அதை கனம் E. T. உவில்லியம்ஸ் போதகர் அனுவதித்தார். ஆட்சேபங்கிளம்பியும் அதைச் சமாதானமாய் விட்டுவிட முக்கிய பிரேரணை சர்வசனசம்மதமாய் அங்கிகாரமாயிற்று. பின்னர் மத்திய மதுவிலக்குச்சங்கம் 20ல. யாழ்ப்பாணகல்லூரிமண்டபத்திற்கூடிற்று. அத்தருணம் அக்கிராசனர்சுகவீனமாயிருப்பதாலும் உப அக்கிராசனர்வரத் தாமதித்ததினாலும் 'சிலோன்பேற்றியற்' பத்திராதிபரும் நியாயதுரந்தாருமான மெஸ். கனகரத்தினம் அவர்கள் அக்கிராசனராக்கப்பட்டார். அத்தருணம் உதவிக்கொம்மிஷரும் தமக்கு ஆலோசனை கூறும்படி அழைக்கப்பட்டார். அரசினரின் கேள்வியைக்குறித்து நீண்ட வாக்குவாதம்நடந்து ஈற்றில் அரசினரின் கேள்விக்கு இசைவதே சரியென்று நிர்மானிக்கப்பட்டது. அத்தருணம் நமது கூட்டத்தின் பிரதிநிதிகளாய்ச்சென்ற மூவரும் ஸ்ரீ. செல்வத்துரைப்பிள்ளையவர்களும் உபகொம்மிஷனரைச்சந்தித்து நம்மூரவரின் தீர்மானத்தைத் தெரிவித்தனர். அவரும் அதற்கிசைந்துகொண்டார். இனிக் கதிரிப்பாய்த் தவறணையும் தொலைய நாட் செல்லாதென நம்புகிறேம். சிலர் ஒரேயடியில் எல்லாவற்றையும் வீழ்த்திலென்ன என்கிறூர். அது முடியாதகாரியம். கோடரிவைத்தவுடன் மரம் வீழ்ந்துவிடுமோ? «மெல்லமெல்லப் பாயுந்தண்ணீரே கல்லையுமுருவிப்பாயும்» பெரியராட்சதனைவிட்டுச் சிறியராட்சதனைவீழ்த்துவதில் பலனென்ன? நதிதியுடையார் ஓர்புறஞ் சார்வாரோ எம்மது உம்மதென்று பார்ப்பாரோ? எது அதிகானமையோ அதையே முந்தச் செய்வார். பெரிய ராட்சன்விழுந்தால் மற்றதுந் தானுய்த் தளர்வுறும் "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" அதற்குஇடைஞ்சலாய் எவர் நிற்பாரரோ அவரே தேசத்துரோகிகளாவார். இவ்வொற்றுமை நிலைக்குமானால் அரியகாரியங்களைச்செய்துமுடிக்கலாமென்பதிற் றடையில்லை.

எம் ஏசன்றர்—வடமாகாண ஏசன்றர் மெஸ். கொன்ஸ்றன்ரைன் துரையவர்கள் முல்லைத்தீவு, மன்னுர்ப்பகுதிகளுக்குச் சுற்றோட்டமாய்ச் சென்றிருக்கின்றனர்.

யுத்த ஞாபக சின்னம்—செர்மனியரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட இயந்திரப்பீரங்கியொன்று யாழ்ப்பாணக் கச்சேரியிலே யுத்த ஞாபகசின்னக் காட்சிப்பொருளாய் வைக்கப்பட்டிருக்கிறது.

புகையிரதப்பகுதி—இப்பகுதியார் பழைய விளக்குகளைத்தள்ளிப் புதிதாக மின்சாரவிளக்குகளைப் பாவிக்கக்கருதி அதற்காக ரூபா 40,000 பிரித்துவைக்கச் சம்மதிகொடுத்திருக்கிறூர்கள்.

நெல்வரவு—தேவிபட்டணத்திலிருந்து நாகபட்டணத்துக்கு ஏற்றியனுப்பப்பட்ட 4750 மூட்டை நெல்லு தோணியிற் பழுதுகண்டமையால் ஊர்காவற்றுறையிலிறக்கப்பட்டது. அதை அரசினர் தம் பொறுப்பில் வாங்க யோசிக்கின்றனராம்.

நியாயப் பிரமாணப் பரீட்சை—கடைசியாய் நடந்த நியாயப்பிரமாணப் பரீட்சையில் பிறக்தர்மாருக்குரிய முதற் பரீட்சையில் 62 பேர் சித்தியெய்தினர். அவருள் 13 பேர்தமிழர். இரண்டாம் பரீட்சையிற் சித்தியடைந்தோர் 32 பேர். அவருள் 15 பேர் தமிழர். அவர்களாமங்களாவன: C. யோகரத்தினம், R. கந்தையா, J. H. P. விசயரத்தினம், A. ஜெயிமையா, K. மயில்வாகனம், A. கந்தையா, S.R. A. மூடி, R. மகாதேவ, S. கனகசபை, C. A. கைலஸ், C. R. ஜேசேவ், M. ஜோசேவ், M. செல்லத்தம்பி, M. இரத்தினசிங்கம், H. சிவக்கொழுந்து

மதுபரிபாலனைத் தாக்கல்—மதுபரிபாலனபகுதி இன்ஸ்பெக்டர் மெஸ். முருகேசு என்பவர் திருநெல்வேலியிலே தமது கடமை சம்பந்தமாய விசாரணை நடத்திய போது, சாராயத்தவறணைகாரனும், வேறு அறுவரும் அவரைச்சருவி இம்சைசெய்தனர். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் வழக்குத்தொடர்ந்தார். பொலிஸ்நீதிபதி விசாரணைசெய்து 5 பேரைக் குற்றவாளிகளாகக்கண்டு, தவறணைக்காரனுக்கும் வேறிருவருக்கும் மும்மூன்றுமாசமறியலும், மற்றிருவருக்கு 50 ரூபாய் வீத அபராதமும் விதித்தனர்.

நெற்றருமம்—சங்குவேலி மெஸ். K. V. மார்க்கண்டரவர்கள் இப்பஞ்சகாலத்தில் ஏழைகளுக்குதவும்படி ஆயிரம் பறை நெல்லை நம் ஏசன்றரிடம் ஒப்படைத்தனர். அது பெரிய தருமந்தான். அந்தருமம் சென்ற 27ல. புத்தூர் வங்களாவில் வழங்கப்பட்டன.

மரணசங்கதி—மானிப்பாய் மெஸ். ச. சுப்பிரமணியம் அவர்களின் புத்திரியும், மெஸ். வேலாற்றன் சுவாமிநாதபிள்ளையின் பாரியாருமாகிய அன்னலட்சுமி சுரநோய்வாய்ப்பட்டிருந்து பெற்றோரையும் பிராணநாயகரையும் நாலு குழந்தைகளையும் தவிக்கவிட்டு சென்ற 26-ந்திகதி தேகவியோகமானசங்கதி எவர்க்கும் மின்னுதிடியிடித்தவாறுயிற்று. மரித்தவ பெயருக்குத்தக்கபடி அன்னலட்சுமியும் குண விசேஷம் பொருந்தியவளும் என்பதில் மயக்கமில்லை. பத்தாவுக்கேற்ற பதிவிரதையாய் நகமுந்தசையும்போல் ஒற்றுமையாய் வாழ்ந்திருந்த இவ்விளங்குடும்பம் இடையில் முறிந்ததைக்குறித்து நாமும் மிக அனுதாபமடைகிறேம். பிரேததகனம் மிகுவிமரிசையாயும சிறப்பாயும் பல இனசனர் பிரபுக்கள்கூடியசமுகத்தில் நடந்தேறியது.

# இலங்கை.

மெஸ். டயசின் உரிமைத் தத்துவம்—பாரிய தனவந்தரும் மெக்கன்றைல் வங்கிச் சிறுப்பருமாயிருந்து காலஞ்சென்ற மெஸ். டயஸ் என்பவரின் ஆதனங்களுக்குத் தத்துவமெடுத்தல் முதலானவைகளுக்காக அரசாட்சியார்க்கு வருமானமாய் வந்த தொகை 10 இலட்சம்ரூபாயாம்.

## சாதுசுந்தர்சிங்.

இக்கிறீஸ்தசந்நியாசியார் 20-ந்திகதி கொழும்பில் இறங்கி அங்கே பட்டின சபா மண்டபத்தில் ஓர் பிரசங்கஞ்செய்து லக்னோவில் கூடப்போம் மிஷனரிமார் சங்கத்துக்குச் செல்லுகிறூர். இவர் தஞ்சாவூருக்கு ஓர்முறை வந்தபோது ஓர் ஆச்சரியமான சங்கதியைச்சொன்னுரென்று "ஜனனுகூலன் கூறுகிறது" அது பின்வருமாறு:—

"ஹிந்துக்களால் மிக்க பூஜிதமாயெண்ணப்படும் ஹிமயகிரி பருவதத்தின் சிகரங்களிலொன்று கைலாசமலை என்னப்படுவது. அந்த மலைதான் அநேக ரிஷிகளின் வாசஸ்தலமென்று சொல்லப்பட்டதால் அதைப்பார்க்க நான் மெத்தஆவலோடு பிரயாணஞ்செய்துபோகையில் ஷை சிகரத்தினருகே வழியில், திருசிலுவை அடையாளம் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்றுப் பேராச்சரியமுற்றேன். ஹிந்து தேவர்கள் நடமாடுவதாகக் கருதப்படுமிடத்தில் அர்ச்சிக்கப்பட்ட சிலுவை காணப்படுவதெங்ஙனமென்று சிந்தித்து இன்னும் இதுபோன்ற கிறிஸ்துவ சின்னங்கள் இவ்விடத்தில் காணலாகுமோவென்ற ஆவலுடன் அந்தச் சுற்றுப்புறங்களிலேயே சிலநாள் அங்குமிங்கும் சுற்றித்திரிந்தேன். ஒன்றும கண்ணுக்குப் புலப்படவில்லை. கடைசியில் ஒருநாள் ஒரு சிறு சிகரத்திலிருந்து கீழே இறங்குகையில் சூரிய கிரணத்தின் ஒளியானது என்கண்ணை மங்கச்செய்ய எனக்கு முன்னிருப்பதென்னவென்றும், நான் எங்கேகால்வைக்கிறே னென்பதுமுதலாய்த் தெரியாமல் அடியெடுத்துவைக்கவே, கால் தவறி விழுந்து மலைச்சரிவில் உருண்டு புரண்டு ஒரு பள்ளத்தாக்கில் தள்ளப்பட்டேன். இவ்வாறு அலங்கோலமாகத் தலைகீழாய்த் தள்ளப்பட்ட அதிர்ச்சியினுல் அங்கு நான் சில நிமிஷம்வரையில ஸ்மரணையற்றுக்கிடந்தேன். பிறகு மூர்ச்சை தெளிந்து கண்திறந்து பார்க்கையில் எனக்கெதிரே பெருங்குகையொன்றிருப்பதையும் அதன் வாசலில் நரைத்துத் திரைத்துப பழுத்த கிழவனொருவன் உட்கார்ந்திருப்பதையுங் கண்டேன். அவர் தலைமயிரும் தாடிமயிரும் நீண்டு வளர்ந்து நிலத்தில் படிந்தன. கண் புருவங்களிரண்டும் வளர்ந்து தாழ்ந்து வளைந்து, கண்ணைத் திரைபோட்டதுபோல் மூடிக்கொண்டிருந்தன. அவர் ஆடையொன்றும் உடுக்காமலிருந்தாலும் அவர் ரோமங்கள் அவரது நிர்வாண தேகத்தை முழுதும் மூடி மறைத்திருந்தன. அந்த மகாரிஷி ஒருபெரிய தீர்க்கதரிசியாயிருக்கவேண்டுமென மதித்து அவரைப் பயபக்தியுடன் அண்டி அவருடன் வார்த்தையாட ஆரம்பித்தேன். அவர் என்னுடன் இரண்டொரு வார்த்தைபேசி நான் கிறிஸ்தவன் என்று தெரிந்துகொண்டபின், பார்ச்மெண்ட் என்னும் தோற்கடிதாசியினுல் செய்யப்பட்டிருந்த சுவிசேஷத்தின் பழைய புத்தகமொன்றையெடுத்து அதினின்று அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் ஐந்தாம் அதிகாரத்தை வாசிக்கஆரம்பித்தார். அதன்பின் அந்த மகாரிஷி தன் சுய சரித்திரத்தை எனக்குப் பின்வருமாறு சொல்லலாயினூர்,

"நான் 318 வருஷங்களுக்குமுன்னே எகிப்து நாட்டைச்சேர்ந்த அலெக்சாண்டிரியா பட்டணத்திலே ஒரு மகம்மதிய குடும்பத்திலே பிறந்தேன், எனக்கு 30 வயதானபோது, உலகத்தைத் துறந்து மகம்மதிய சந்நியாசியானேன். அதில் எனக்கு ஞான ஆறுதல் கிடைக்கவில்லை. ஒருநாள் ஒரு கிறிஸ்துவ குருவைக்கண்டேன். அவருடன் சம்பாஷித்துத் தர்க்கம்பண்ணினதின் பலனுக சில நாட்களுக்குப்பின் நான் கிறிஸ்துவ வேதத்தைத்தழுவி ஞானஸ்நானம்பெற்றேன். அப்போது எனக்கு ஞான ஆறுதல் கிடைத்தது. எனக்கு ஞானோபதேசம் பண்ணினவர் அர்ச். சவேரியாரோடு கூடப்பிறந்தவரின் மகனுகிய ஜெர்ருஸ் என்பவர். இவர் அக்காலத்திலிருந்த அகபர் சக்கரவர்த்திக்கும், மற்றும் பலமத பிரசங்கிகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தவர். நான் வைத்திருக்கும் இந்தப் புராதன பைபிள் புத்தகம் கான்ஸ்டன்டைன் அரசர்காலத்தில் செய்ததுமன்றி அர்ச. சவேரியாருக்குச் சொந்தமாயிருந்து, அவர் வையகமென்வந்தது. அவர் காலத்துக்குப் பின் டீ ஜெர்ராசுக்குச் சொந்தமாக, அதை அவர் எனக்குக் கொடுத்தார். எனக்கு 105 வயதானபோது உலக சஞ்சாரத்தைவிட்டு என் சீவியத்தின் மீதியான காலத்தைத் தனியேயிருந்து கழிக்கவெண்ணி யிந்தத்தானத்தையடைந்தேன். இங்கே நானுவித பழவர்க்கங்களும் அரியகந்தமூலாதிகளுமுண்டு, இவைகளிற்சில கற்பத்தைக்கொண்டிருக்கின்றன. இத்தகைய மூலிகைகளைப் புசித்தே நான் என்வாழ்நாளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறேன்"என்பதே. மேற்படி சாது அவர்கள் இந்த ரிஷியைக் காணவருபவர்கள் தனக்கு அறிவித்தால தான் கூட்டிப்போவேனென்றறிவித்தார். போகஉடன்பட்டார் ஒருவரிருவராதலால் அம்முயற்சியை விட்டுவிட்டார். இனியாவது என்னசெலவழித்தாலும் அவரைப்போய்ப்பார்ப்பது கிறிஸ்தவர்கடமையல்லவா?

## குறவன்குடில் விவாகஉற்சவம்.

புத்தளத்தைச்சார்ந்த குறவன்குடில் வாசராய், கனதன செல்வாக்கினராய், இப்பாகத்துப் பிரஸ்தாபமாய் யாவராலும் கண்ணியமாய் அறியவும் மதிக்கவும்பெற்றவரும், பீ. செ. சேகுறம் ஜான் முதலாளி அவர்களது அரியஏக செல்வப்புதல்வி சின்னமீராநாச்சியா என்னும் நாமம்புனைந்த கன்னிக்கும், புத்தளம்நகரிலே கங்காணியார்குலத்துவாடியிலே யாவராலும் புளக்கமாய் அறியப்பெற்ற ஆனுப்பிள்ளை மரைக்காயரின் புத்திரன் முகம்மது காசின்மரைக்காயர் எனும் நாமம் பூண்ட வாலிபனுக்கும் நடந்த 12ல. குருவாரம் அஸ்தமனகாலத்தின்போது மணவாட்டியினது தந்தையால் குறவன்குடில்சாகியத்து மற்றெங்குமில்லாதபான்மையாய் கட்டப்பட்ட சொர்ண மாளிகையில் விவாகமுகூர்த்தம் ஆரம்பமாக நிர்ணயித்திருக்க மணமகன் புத்தளப் பட்டினமிருந்து மோட்டாரதாரூடராய்வந்துசேர்ந்து கண்கொள்ளாக் காட்சிக்குரிய தீபாலங்காரங்களுடன் நட்டுவமுட்டு நாதசின்னமாதிய வாத்தியங்கள் கோஷிக்க 175 ரூபாய்க்கு அழைப்பிக்கப்பெற்ற விதவிதமான வாணவேடிக்கைநிகழப் பெருங்காட்சிக்குரிய மாட்சியாயிருக்க, வீதியுலாப்போந்து மணவாளன் அசுவரதமீதூர்ந்து பற்பலசிகர்தத சனக்குழாங்களுடன் பள்ளிவாசல்சேர்ந்து தொழுததும் மீண்டும் ஜேட்டுந் தெருவால் மணல்வழியைபடுத்ததும் ரதமவிட்டிறங்கி அசுவமீதுநகர்ந்து சித்திரவிசித்திரசிங்கார அலங்கிர்தமயமாய், சோடிக்கப்பெற்றிருந்த மணவாட்டியின் மன்றலினைசென்றதும், தங்கள் மார்க்கமுறமை ஆசார[illegible]பசாரப்படி மணமகளின் பிதாவானவர் மா[illegible]யின் கைப்பிடித்து தம்புராஸ்விசாத்தையும் எடுத்துத்தொடுத்து புத்திரியை மின்றே தத்தம்பண்ணிவிடுவதாய்ப் பரிவுறமொழிந்து மாப்பிளாவிடம் கையளித்துவிட, மாப்பிளாயானவர் காதலியையில் தக்கப்பவுண்பரிசித்து தாலி,ஆபரணம் சூட்டி தாம்பூலம் மங்கைக்குப்பரிமாற மனையாட்டி கணவனுக்குத் தாம்பூலம் பரிமாறிவிட, வந்தோர்க்குந் தாம்பூலம் பரிமாறப்பட, திகவி, முகல்லம் லெவ்வைத்தம்பிமரைக்கார் குருமுறமையாம்படி சலேசுஉச்சாடணமோதி அரசினரால் அளிக்கப்பெற்ற தத்துவ ரெஜிஸ்றரைப்பதித்துக்கலியாணத்தைமுடித்துவிட, அச்சுபமங்கலதினத்தைமென்று அரசாங்க அங்கிகாரமுறைமையாம்படி தம்மார்க்கத்தவர்க்கு நீதிவிசாரணை கண்டனங்களைத்தீர்க்கநடத்த அதிகாரசுவிகாரமருளப்பெற்றிருக்கும் புத்தளப்பட்டினத்து ஊர்மரைக்கார் உ. சி. ம. மு மு. முகம்மதுக்காசின்மரக்காரும், கற்பிட்டி பட்டணத்து ஊர்மரைக்காயர் அ. க. மு. அப்துல்காசின் மரக்காயரும், ஆலங்குடா, கா. பி. சேகிஸ்கந்தர் முதலாளியாதியோரும், பெருமிதசனர் சமூகமாயிருந்து பரிமளிப்புறச் சபையைச்சிறப்பித்து மகிழ்வித்தும் சோடசோ உபசாரணைகளாலும உபசரிக்கப்பெற்றும் சமஸ்தரும் சுமுத்திரையான பூரிப்புற்றனர். யாறும், இந்த இளங்குடும்பம் வளர்பிறைபோலோங்கி சகலசுகஅனுபோதசெல்வத்தாலும் ஆல்போல் கிளைத்துத்தழைத்து அறுகுபோல்வேரூன்றி மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பீர் என்ற முதியோர் வாழ்த்ததுப்போல் சற்புத்திரசந்தானவிருத்தியுருத்து நீடூழிவாழ படைத்தோன் ஆசியையிரந்துவேண்டிச் சோபனவாழ்த்துக கூறுகின்றேன்.

பனையடி D. J. C.

## இந்தியா.

ஓர் பிராமணர் மகமதியராதல்—மெஸ். வி. என். வைத்தியநாதையர் என்ற பிராமணர் முகமதியமதத்தைச்சேர்ந்து குலாம் முகம்மது என்ற நாமஞ்சூடிக்கொண்டு திருச்சிறுப்பள்ளியிலுள்ள மகமதிய பள்ளிவாசலில் தற்சமயம் இருக்கிறூராம்.

ஜலவிபத்து—பம்பாயில் அமெரிக்க மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்து வாலிபபெண்கள் 63 பேர்களும், 31 சிறுவர்களும் அந்தந்த உபாத்தியாயினிமார்களோடு பொழுதுபோக்குக்காக மஹிம் என்றவிடத்திலுள்ள கடற்கரைக்குச் சென்றவிடத்தில அங்கு ஜலத்தில் தங்கிவிளையாடிக்கொண்டிருக்கையில் 11 பெண்களும், ஒரு சிறுவனும் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு மணல்மேட்டுக்குச் சென்றனர், அலைகள் வேகமாய் அடித்ததினுல் அங்கிருந்து கரைக்குத்திரும்பமுடியாமல் அவர்கள் ஜலத்தில் மூழ்கியிறந்தார்கள். பரிதாபம்! "நீர் விளையாடேல்" என்பதை ஏன் மறக்கிறூர்கள்?

சங். பெர்ட்ராம் சுவாமிகள்—திருச்சிறுப்பள்ளி அர்ச். சூசையப்பரின் கலாசாலையின் மஹிமைரும் சென்னை சர்வகலாசாலை அத்தியட்சகர்களில் ஒருவருமாகிய சங். எப். பெர்ட்ராம் சுவாமிகளுக்கு டீ சர்வகலாசாலையாரால் "எல். எல். டி" என்னும் கௌரவ வித்தியாபட்டம் கொடுக்கப்பட்டது.

### இந்திய உபமந்திரி ஸ்தானம்.

லோட் சின்ஹ இந்திய தேசாதிபதியாய் வருவதால், அவரிடத்திற்கு இந்திய உபமந்திரியாய் லோட்விற்றன் நியமிக்கப்பட்டார்.

### துணிகரமான கொலை.

ஆடுதுறையில் விசுவலிங்கம் செட்டி இதுவரை விசேஷ தனவந்தரும் வியாபாரியுமாயிருந்தார். ரங்கசாமி படையாச்சி முனிசிப்பபடையாச்சி சாமிநாதபடையாச்சி செல்லப்படையாச்சி கிருஷ்ணபடையாச்சி என்னும் ஐவரும் அவர் வரும்வழியில் ஓரிரவு காத்திருந்து கத்தியால் வெட்டினதினுல் அவர் இறந்து போனூர். இவருள் 1-ம் 5-ம் எதிரிகள் ஓர் வியாச்சியமூலமாயும், 2-ம் எதிரியைச் செட்டியார் வேலையினின்று தள்ளிவிட்டதினிமித்தமாயும், 4-ம் எதிரி 2-ம் எதிரியின் மகனுனதாலும், 3-ம் எதிரி 2-ம் எதிரியின் பணிவிடைகாரனுயிருந்தமையாலும், இக்கொலை செய்யப்பட்டதாம். இவ்வழக்கில் 1-ம் 2-ம் 3-ம் எதிரிகளுக்கு மரணதண்டனையும், 4-ம் 5-ம் எதிரிகள் சிறுவரானமையால் ஆயுள்பரியந்தம தீவாந்தர சிட்சையும் சென்ற 18ல. தஞ்சைசேஷன்கோட்டில்விதிக்கப்பட்டது

### ஆற்றில் ஆழ்ந்த மணமகன்.

இம்மாதம் முதலாந்தேதி கலியாணஞ்செய்த கோதண்ட பாணி நாயுடு என்றவன் 3-ந்தேதி கடலூர் கடிலம் ஆற்றில் தன் சிநேகிதருடன் ஸ்நானஞ்செய்யப்போனவன் ஆழமானவிடத்தில் கால்தடுமாறிவிழுந்து அகப்பட்டுக் காலகதியடைந்தான். இவன் பிரேதம் மறுநாள் கண்டெடுக்கப்பட்டது. பரிதாபம்!

### அபின் திருட்டு.

ஷான் தேசத்திலிருந்து பாற்சாடப்பியில் அடக்கி சவுக்காரத்தைச்செய்யும் விதைகளின் மூட்டையில் ஒளித்து வெகு சாமார்த்தியமாகக் கொண்டுவந்த 320 வீசை அபின் இரங்கூன் துறைமுகத்தில் அதிகாரிகளால் பிடிபட்டுவிட்டது. இந்த சரக்குஎனுப்பிய ஆசாமியைப்பிடிக்க ஷான்தேசத்துக்கு பொலிசார் சென்றிருக்கிறூர்கள்

### [illegible]ம்தீப்பற்றியது

சென்னை [illegible]வன் சுப்பிரமணியர் கோயிலில் க[illegible]ழமை சாயந்தரம் சுமார் 28,000 ரூப[illegible]ய்து புதிதாக செய்யப்பட்ட [illegible]ம் அக்கினிக்கிரையானது. இத[illegible]ணம் கண்டுபிடிக்கக் கூடியதாயில[illegible]ளுக்குமுன் திருவண்ணாமலை, சீ[illegible]ஸ்பரன்கோயில் முதலியவிடங்க[illegible]களின்மீது இவ்விதமே அக்கினிபகவான் விளையாடினது போதாதென்று சென்னைச்சுப்பிரமணியர்கோயில் தேரின்மீதும்விளையாடினர்போலும்.

### பஞ்சம கவுன்சிலர்.

திருக்கோவிலூர் முனிசிப்பாலிட்டியில் நாராயண சாம்பான் என்ற ஒரு பஞ்சமனர் முனிசிப்பல் கவுன்சிலராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றதாம். பஞ்சமரின் முன்னேற்றம் பரவி வருமானுல் சாதிபேதம் தானே ஒழிந்துவிடும்.

### புத்திரனை எலம்போட்டவன்.

பெஷவாரில் கிலாபத்து நிதிக்கு பணங் கொடுக்கவேண்டி ஒருவன் தன் குமாரனை எலம்போட்டு 500 ரூபாய் பெற்றுக் கொடுத்திருக்கிறதாக லீடர் என்ற பத்திரிகை கூறுகிறது. மதவைராக்கியத்தைப் பாருங்கள்.

புலி சிறுவரைத் தாக்கிற்று—திருவண்ணுமலையில் காட்டுமலையனூர்ப்பக்கத்தில் 12 வயசுப் பையரிருவர் மாடுமேய்த்துக்கொண்டிருக்கையில் குரக்கன்பயிருட் பதுங்கியிருந்த சிறுத்தைப்புலியைக்கண்டு வெருட்டவே அது அவர்கள்மேற் பாய்ந்து ஊறுபடுத்திற்று. ஒருவன் தப்புவதரிதமையாம் "துட்டரைக்கண்டாற தூரவிலகு"

ஓர் சத்திரம்—புதலை வித்தியாசேச முதலியாரென்னும் கத்தோலிக்கக் கிறீஸ்தவர் திருக்கோவலூர் வடவீதியில் ஏற்படுத்திய சத்திரம் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனப்பட்டு வந்தது. சிலகாலமாய் வேறொருவர் மேற்பார்வையில்வந்து பொதுசன நன்மையைக்குறைத்துத் தம் சொந்தப்பிரயோசனப்படுத்தி வருகிறூராம். இதை மேற்படி முதலியாரின் உரித்தாளரான சின்னையா முதலியார் கவனிக்க வேண்டுமென்று "சுதேசமித்திரன் கடிதர்" கூறுகிறூர்.

### திருச்சினுப்பளியில்பிராமணரல்லாதாரின்மகாநாடு.

சென்ற 5ல. திருச்சினுப்பளிப் பட்டினமண்டபத்தில் மெஸ். பக்கிரிசாமிப்பிள்ளையின் அக்கிராசனத்தின்கீழ்கூடி 19 தீர்மானங்களைச்செய்தனர். முதல் அக்கூட்டத்தார கவர்னர் இளவரசரை இராசவிசுவாசத்துடன்வரவேற்கிறதென்றும், பிராமணரல்லாதாரின்முன்னேற்றத்திற்காய்ப்பாடுபட்டுழைத்தடக்டர்நாயராதியரின் குடும்பத்தார்க்குத் தம்மனுதாபத்தைத் தெரிவிக்கிறதென்றும். இந்தியவாசிகள் பிஜிதீவு முதலிய இடங்களில் இவ்வரசரின் ஆளுகைக்குக்கீழ் வருந்துவதை நிவிர்த்திசெய்யும்படிகேட்டும், பார்ப்பார் தாழ்ந்தஸ்திலிருந்தாலும், மேலந்தஸ்தத்திலுள்ளமற்றையசாதியாருக்குமேலாயவர்களை உயர்த்தி உத்தியோகநிர்ணயஞ்செய்வதை நீக்கிவிடவேண்டுமென்றும் முனிசிப் நியமனத்தில் மேற்கோட்டார் பெரும்பாலும் பார்ப்பாரையே தெரிந்தெடுப்பதால் அவரது நியமிக்குந்தத்துவத்தை நீக்கிவிடவேண்டுமென்றும், சமீபத்தில் இளைப்பாறவிருக்கும் சேஷகிரி ஐயருக்குப்பதிலாய் ஒரு பிராமணரல்லாத நீதிபதியை ஏற்படுத்த வேண்டுமென்றும், பார்ப்பாரல்லாதார்க்கு இலவச கல்வி பயிற்றப்படவேண்டுமென்றும், பஞ்சாப்பில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றியும் கிலாபத்து விஷயமாயும் சனங்கள் மனதைப்புண்படுத்தாமல் செய்யக்கூடியவைகளைச் செய்யவேண்டுமென்றும், பொதுப்பணத்திலிருந்து பிராமண விதவைகள் விடுதி கட்டியிருப்பதையும, ஆஸ்பத்திரியிற்பிரத்தியே

மான அறைகள்கட்டியிருப்பதையும் தவிர்த்து எல்லாருக்கும் பொதுவாயிருக்கச்செய்யவேண்டுமென்றும், தென்னிந்திய புகைரதவீதிகளில் பிருஇப்பற்றுயப் பார்ப்பாரே நியமிக்கப்பட்டிருப்பதால் இனிமேலாயினும் மற்றையோரையும் நியமிக்கவேண்டுமென்றும், திருச்சியில் ஆதிதிராவிடர் குடியிருக்க வீடுவாங்கிக் கொடுக்கவேண்டுமென்றும், அந்த சம்மானர் அதிகமாயிருப்பதால் அவர்கள் முன்னேற்றத்திற்காய் அரைச்சம்பளத்திற் கல்விகற்க ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும், ஆசாரி என்ற அர்த்தமில்லாச் சொல்லை நீக்கி ஆச்சாரி என்று சாதனங்களில் எழுதவேண்டுமென்றும், முனிசிப்பல லோக்கல்போட்டு முதலியவைகளில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்றும், சமஸ்கிருத ஆயுர்வேதவைத்தியத்திற்குப் போல் தமிழ் ஆயுர்வேத வைத்தியத்திற்கும் உதவிசெய்ய வேண்டுமென்றும், தமிழ் விஷயத்தில் மிகப்பாடுபடும் மெஸ். மாணிக்கநாயகரைச் சென்னை யூனிவர்சிட்டிமெம்பராய்ச்சேர்க்கவேண்டுமென்றும், இவையாதியதீர்மானங்களைச் செய்தனர்.

---

அவுட்லூக் என்னும் பத்திரிகை.
உறுதிமொழியின் கதியென்ன.

என்றதின் விஷயமாக, லண்டனில் பிரசுரமாகும் அவுட்லூக் என்னும் முஸ்லீம் பத்திரிகை சில வியாசங்கள் எழுதிற்று.

அதில் பெல்ஜிய உடன்படிக்கைப் பத்திரத்தைச் செர்மனி ஒரு துண்டுப்பத்திரந்தானேயென்று சொன்னதற்காக ஆத்திரப்பட்டு ஐக்கியதேசங்கள் உலகத்தை யுத்தத்தில் மாட்டிவிட்டன. ஆனால் அரபியருக்கும் துருக்கியருக்கும் கோடிக்கணக்கான முஸ்லீம் பிரஜைகளுக்கும் இவர்கள் கொடுத்த உறுதிமொழி என்னவாயிற்றென்று கேட்கிறது?

அரேபியாவிலுள்ள முஸ்லீம் புண்ணியக்ஷேத்திரங்களும் மெசபொத்தாமியாவின் பரிசுத்தமான பள்ளிவாசல்களும் ஜெட்டாத்துறைமுகப்பட்டினமும் இந்தியாவிலுள்ள யாத்திரிகளால் இடைஞ்சல் ஏற்படாதவரையில் பிரித்தானிய சேனைகளால் தாக்கப்படவும் எவ்வித உபத்திரவஞ்செய்யப்படவும் மாட்டாது என்று இராசாங்க அனுமதியின்பேரில்இந்தியபிரதிநிதிகாவலர் 1914ம்ஸ்ரீ கார்த்திகைமீ 2ஆ அறிவித்தார். பிரான்சிய ருசிய அரசும இவ்வாறே உறுதிகூறின.

துருக்கிய தலைநகரைக் காப்பாற்றுவாவது ஐசுவரிய துருக்கர் அதிகமாயுள்ள ஆசியா மைனரையும் திரேஸையும் கைப்பற்றுவாவது காம சண்டையிடவில்லையென்று 1918-ம்ஸ்ரீ தைமீ 5ஆ பிரேதமந்திரியார் கூறினர்.

தற்போது உதுமானிய ராச்சியத்தில் துருக்கர் வாழும் பகுதிகள் சர்வ சுதந்தரத்துடன் அப்படியேயிருக்குமென்றுபிரசாதிபதிவில்சன் 1918ம்ஸ்ரீ தைமீ 8ஆ தெரிவித்தார்.

முஸ்லீம்களின் அபிப்பிராயப்படியே கிலாபத் பிரச்னை பைசல்செய்யப்படவேண்டியது. இம்முறையிலிருந்து பிரித்தானிய அரசு இதுவரை பிறழ்ந்ததில்லை யென்று லோட் ரபேட்செசில் 1917ஸ்ரீ கார்த்திகைமீ 29ஆ சொன்னார்.

அரபியராலே ஆளப்படவேண்டிய ஓர் அரபியதேசத்தைச் சிருட்டிப்பதற்காக காம் ஒப்புக்கொண்டுவிட்டோம். அலெப்போ முதலிய துறைமுகங்கள் அரபியருக்கு மிகு அவசியமாயிருக்குமாதலால் அதை விட்டுவிடுவதே ஒழுங்கான முறையென்று மெஸ். பார்னல் 1918ம்ஸ்ரீ ஐப்பசிமீ 31ஆ அமரிக்க உத்தியோகஸ்தர் முன்னிலையில் சொன்னார்.

பக்தாத் வாசிகளே உமது க்ஷேமமும் கஷ்டமற்ற வாழ்வுமே எங்கள் கவலையாயிருக்கும். அன்னிய ஸ்தாபனங்களை உங்கள்மேல் பிரித்தானிய அரசாட்சியார் சுமத்தார்கள்.

உங்கள் தேச ஞானிகளும் நூலாசிரியரும் கொண்டிருந்த நோக்கங்கள் நிறைவேறுமென்பதே பிரித்தானிய அரசின் நம்பிக்கை. உங்கள் சாதியின் நோக்கங்களையும் பரிசுத்த சட்டங்களையும் பின்பற்றியே நீங்கள் வாழவேண்டுமென்பதே எங்கள் விருப்பமென்று 1917-ம்ஸ்ரீ பங்குனிமீ 19ஆ சேர் ஸடான் மீமாட்பிரசித்தப்படுத்தினர்.

என்றும், பின்பு பாசரா நகரம் பிடிபட்டதும் ஷெசிபன என்னும் பரிசுத்த ஸ்தலத்தில் சண்டைநடத்தியதும், சிலேமான்பக்என்ற பரிசுத்த கோயிலைப் பிரித்தானிய சேனைகள் அணுகிறதென்றும், சுல்தான் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ளா மல்சுயேச்சைபெற்றதாய்அறிவிக்கும்படி பிரித்தானியர்யுத்தக்கப்பலாதியவைகளால்ஜெட்டாதுறைமுகத்தைத் தாக்கினார்களென்றும், பக்தாத், எருசலேம், கூபாமுதலிய இடங்களைக் கைப்பற்றி, மெதீனாவைப் பயமுறுத்திப் பணியச்செய்தார்களென்றும், காப்லா, நஜிப் என்ற இரு க்ஷேத்திரங்களைப் பிரித்தானியர் கைப்பற்றி அதற்குள் முஸ்லிம யாத்திரிகளையுஞ் செல்லவிடாது தடுத்தாரென்றும், திரேஸ்பகுதி கிரேக்குக்குக் கொடுக்கப்பட்டதென்றும், ஸிமேர்னவில் கிரேக்க ஆதிக்கமேற்படவேண்டுமென்ற உடன்படிக்கையில் கண்டிருக்கிறதென்றும், சிரியாவைப் பிரான்சும், மெசேப் பொத்தாமியாவைப் பிரித்தானியாவும், ஆளத்தொடங்கிவிட்டனவென்றும், இன்னும்பல குறைகளையும் கூறிற்று. ஈற்றில் இப்பத்திரிகை இந்தியாவுக்குள் நுழையக்கூடாதென்று தடுக்கப்பட்டது.

---

பிரித்தானிய பத்திரிகைகளின் கண்டனம்.

மொசேப்பொத்தாமியாவை ஆளும் விஷயத்தில் பிரித்தானிய பத்திரங்கள் கண்டித்தெழுதுகின்றன.

மொசேப்பொத்தாமியாவில் கமது சேனைகள் சகவேதனையனுபவித்து வருகிறதென்றும், உடனே உப்பவம தேவையென்றும், அறிவிக்கப் பட்டிருக்கிறது. பிரித்தானிய அரசாட்சியார் தம்மிஷ்டப்படி அரசிய நாடுகளை ஆள அதிகாரப்பத்திரம் பெற்று இந்திய சேனைகளின் உதவியால் அக்காரியத்தைச் சாதிக்கப்பார்ப்பது லகுவல்ல. இந்திய சேனைகள் மனச்சந்தோஷமாயங்கு வேலைபார்ப்பதாய்த் தெரியவில்லை. அந்நியநாடுகளை ஆளவிரும்பினுல் பிரித்தானிய சேனைகள் அங்கு காவல்செய்யவேண்டும். பார்சிக வினைகுடாவின் முனையை மாத்திரம் வைத்துக்கொண்டு மொசேப்பொத்தாமியாவின் மற்றப்பாகங்களை விட்டுவிடுவதே உத்தமமென்று "லண்டன் டைம்ஸ்" கூறுகிறதாம்.

யுத்தத்தை ஒழிக்கும் யுத்தமென்று மகா யுத்தத்தைப்பற்றி நாம் பெருமையாய்ப்பேசிவந்தோம். அந்த ஒரு யுத்தம்போய் 12 புதிய யுத்தங்கள் தற்போது நடந்துவருகின்றன. பாதி யுத்தங்களில் நேர்முகமாயும் மற்றவைகளில மறைமுகமாயும் பிரித்தானியா சம்பந்தப்பட்டிருக்கிறது. 500 லட்சம் பவுன் செலவிட்டு லட்சம் சேனைகளை வேலைக்கமர்த்தி அராபியரின் சுயேச்சையை நசுக்கப்பார்க்கிறோம். இவை போதாமல் இன்னும் சேனைகளுக்கு எழுதியிருக்கிறோம். எகிப்தியரை அடக்க 32 ஆயிரம்பேரும், பலஸ்தீனுவில் 23 ஆயிரம்பேரும், ஐயர்லந்தில் 50 ஆயிரம் பேரும், அன்னியரை அநுவசியமாயடக்கும்வேலையி லேற்பட்டிருக்கின்றனர். ருசியருடன் யுத்தஞ் செய்யும்படியும் நம்மை அழைப்பார்கள் போலிருக்கிறது. உடனே யுத்தத்தை நிறுத்தவேண்டும், வீணை இரத்தச் சேதத்தை இனிப் பார்த்திருக்கமுடியாது. தொழிலாளரே எழுந்திருங்களென்று "டெயிலிகரல்ட்" என்னும் பத்திரிகை வெளியிடுகிறதாம்.

---

ஐயர்லந்து.

கிளேர்பகுதியின்தெருவில் குழிவெட்டி ராணுவத்தைப்பிரிக்க முயற்சிக்கையில் அதைத் தடுக்க மோட்டாரில் சேனைகள் வந்து துப்பாக்கிப்பிரயோகஞ்செய்ததில் ஒரு சின்பீனர் கொல்லப்பட்டான். வேக்ஸூரிடத்தில் பொலிசரின் ஸ்தானத்தை நாசஞ்செய்தவர்மேல் துப்பாக்கி பிரயோகிக்கப்பட்டு கொலலப்பட்டனர். சின்பீனர் குடியரசு நியாயஸ்தலங்களில் பட்சபாதமற்ற அருமையான வேலைசெய்து வருகிறார்களாம். என்னிஸ்கரியில் குடியரசுபடைக்கும் பிரித்தானியருக்கும் சரியான யுத்தம் நடந்தது. குடியரசுபடைகள் பலபுரோட்டெஸ்தாந்தரின வீடுகளைத்தாக்கி ஆயுதங்களையும் பொருட்களையும் கொள்ளையிட்டுப்போயினர். பரக் என்ற பொலிஸ இன்ஸ்பெக்டர் கொலைசெய்யப்பட்டார். பிரித்தானியரின் பெரிய தொழிற்சாலையொன்றைத் திக்கிரையாக்கித் தொழிலாளர் வசித்துவந்த ஒரு தெருவை நாசமாக்கிவிட்டனர். லிமரிக்கவுண்டியிலிருந்துவந்த இரண்டுசிவில் உத்தியோகஸ்தர் பொலிசரின் குறுக்குப் பதிலளிக்காமையால் சுட்டுவீழ்த்தப்பட்டனர். என்னிஸ்கரியில் சண்டையிழந்த 40 சின்பீனரைச்சூழ்ந்து கைதிசெய்து ராணுவவண்டியிலேற்றிப்போனபோது டப்ளினில் சிலர் அவ்வண்டியைத் தாக்கிச் சுட்டார்கள். சேதமொன்றுமில்லை. கலகக்காரரை வெளியேற்ற யோசனைநடந்துவருகிறது. 40 நாட்களுக்குமேல் பட்டினிவிரதங்காக்கும மேயரை விட்டுவிட்டால் கலகம் இன்னும் அதிகரிக்குமென்பது ராணுவத்தலைவர் கருத்தாம்.

பெல்பாஸ்டிலுள்ள ஓர் தொழிற்சாலையில் வேலைசெயதுவந்த புரோடெஸ்தாந்த தொழிலாளர் கத்தோலிக்க தொழிலாளரை வெளியே போகும்படி செய்ததினுல் அங்குள்ள 9 கப்பற்றொழிற்சாலையில் வேலைசெய்துவந்த 4500 தச்சுவேலைகாரரும் டிை தொழிலாளரை மறுபடி வேலைக்குச்சேர்த்துக்கொள்ளாவிடில தாம் 25ஆ முதல் வேலைநிறுத்தஞ் செய்வதாய்த் தெரிவித்துவிட்டார்கள்.

---

அமரிக்காவில் வெடிவிபத்து.

நியுயோர்க்கில் வெடிகள் ஏற்றப்பட்டிருந்த சாமான் வண்டியில் பெலத்த வெடி விபத்து உண்டாயிற்று. இதனுல் 33 பேர் இறந்து 200 பேர் காயப்பட்டனர். 10 லட்சம் பவுன் நட்டமென மதிப்பு. இது சதியாலோசனைகாரரின்செய்கையாம்.

---

ருசியா.

போல்ஷெவிக்கர் கோவலக்கைப்பற்றி 3000 பேர்களையும் 36 துப்பாக்கிகளையம் 2 கவசம்தரித்த ரயில்வண்டிகளையும் 4 என்சின்களையும் 300 ரக்குவண்டிகளையும் பிடித்தார்களாம்.

---

இத்தாலி.

தொழிற்சாலைகளை தொழிலாளர் இன்னும் கைப்பற்றிவருகின்றனர். 6000 பேர் வேலைசெய்யும் பருத்தித்தொழிற்சாலையும் வேரூர் கம்பனித்தொழிற்சாலையையுங்கைப்பற்றிக்கொண்டனர். முதலாளிகள் சம்பளங்கூட்டிக் கொடுப்பதென்ற ஒழுங்கில் சமாதானம் ஏற்படுவதாய் ஒரு செய்தி வந்தது.

---

பெல்ஜியத்திற்குப் புதுநாடு.

செர்மனியின் ஆளுகையிலிருந்து சமாதான உடன்படிக்கையினுல்பெற்ற யூபன், மால்மடி என்னும் இருநாடுகளையும், சர்வதேச சங்கத்தார் பெல்ஜியத்திற்குக் கொடுத்துவிட்டார்கள். அதை அறிந்தவுடனே பெல்ஜியர் பொது ஸ்தானங்களிற் கொடிகளையேற்றிக் குதூகலங்கொண்டாட்டஞ் செய்தனர். இவ்விருநாடுகளுஞ்சேர்ந்து மொத்தக் குடிசனத்தொகை 34000 பேராம்,

---

சதியாலோசனை,

ஆங்கிலேயரை எதிர்த்து தேசத்திலிருந்து நீக்கிவிட அல்ஜீர் சுதேச கட்சிகாரர் எடுத்தசதியாலோசனைக்காக 29 பேர்கள் பிடிபட்டு அரசாங்க நீதிசபையாரால் விசாரிக்கப்படுகின்றனர்.

---

பிரான்சிய பிரசாதிபதி.

பிரான்சுதேசத் தலைவரான மெஸ். டிச்சானல் தமது சுகவீனங்காரணமாகத் தமது உத்தியோகத்தை ராசினாமாச் செய்துவிட்டார். இவர் கடினவேலையால் மூளை சலனப்பட்டுத் தற்கொலை செய்ய எத்தனித்ததாயும் சொல்லப்படுகிறது. அவரிடமாய் மெஸ். மில்ராண்டு தெரிவுசெய்யப்பட்டார். கப்பற்படைத்தலைவரான லீகஸ் பிரதம மந்திரியானுர்.

---

இரவில் பாடும் பட்சி.

வீஸ்டர் என்னும் ஊரில் இரவில் பாடும் பட்சி ஓர் வியப்பை உண்டாக்கிக்கொண்டு வருகின்றது. இப்பட்சியானது அவ்வூரின் ஜனங்கள் அடர்ந்த இடத்தில் உள்ள ஓர் தோட்டத்தில் மாத்திரம்பேரில் பகற்காலத்தில் உட்கார்ந்துகொண்டு இருப்பதுடன் இரவில் மிட்லாண்டு தேசத்துஇரயில்வே பாதையின் முன்னுள்ள அடர்ந்த முட்செடியின்மேல் உட்கார்ந்துகொண்டு அவ்விருப்புப்பாதையின் சத்தத்தைக்கவனியாமல் உரத்த சத்தமாகப் பாடுகின்றதாம். அதன் இனிய பாட்டின் சத்தத்தைக்கேட்க ஏராளமான சனங்கள் அங்குவந்து கூடுவதினுல் பொலிசார் கவலைஎடுத்துக்கொண்டுஅக்கூட்டத்தைக்கலைக்கிறார்களாம்.

---

☞ தயவுசெய்து தங்கள் சினேகிதர்களுக்கு காண்பியுங்கள்.

S. அப்பாத்துரை

ஆயுர்வேதவைத்தியசாலை

பரங்கிப்பேட்டை தென்னுற்காடுஜில்லா.

**1. மதன காமேசுவரி லேகியம்.**

இந்த மதனகாமேசுவரி லேகியத்திற்கு இழந்துபோன சிற்றின்பசுகத்தை ஒருவன் மறுபடியும் அடையவேண்டுமானுல் இந்தலேகியத்தைக்கைவிடாமல் புசிக்கவேண்டும்; அநேக மாத்திரைகளும் லேகியங்களும் சாப்பிட்டிருப்பீர்கள் அதைப்போல் இந்த லேகியத்தை நினைக்கவேண்டாம். இது நூதனமாகசெய்யப்பட்டது. இதின்குணத்தை எழுதிமுடியாது அனுபோகத்தில தெரிந்துகொள்ளலாம். இது, தங்கம், வெள்ளிபஸ்பம், வேர், மூலிகை, வித்துவகைபிசின் இன்னும் பால் பழவகைகள் அநேக விலையுயர்ந்தசாமான்களினுல்செய்யப்பட்டது. தாதுநஷ்டம், பசி, கணகால்எரிவு, தேகவாட்சி கைகால் இடுப்பு முதுகுவலி மார்புவலி முதலிய அவயங்களில் சோர்வுவலி சோம்பல் மேகச்சூடுபாண்டு சோகை மேகவெள்ளை வெட்டை நீர்அழிவு மதுமேகம் சதையடைப்பு இன்னம் பறபல மூத்திரரோகங்களையும் சரீரபுஷ்டி புருஷத்தன்மை அஜீர்ணசக்தி அபரிமிதமான தாது விருத்தியை உண்டாக்கும். நீர்த்திருக்கும் இந்திரியத்தை கெட்டிப்படுத்தி வலிவு உண்டாகும். இந்த லேகியத்தை சாப்பிட தொடங்கினநாள்முதல் கொண்டு இதன் அருமையும் பெருமையும் தெரிந்து கொள்ளலாம் இதை ஒருதரம் தருவித்து பார்த்தால் இதன் குணம் தெரியலாகும்.

8 4 வேளை அடங்கியடப்பி 1க்கு விலை ரு 2—0—0 V. P. P. செலவு அணு 5—0—0

**மஹா கோரோசனை மாத்திரைகள்.**

இந்தமாத்திரைகள் பாலியர்களுக்கு உண்டாகும் சளி இருமல் களைப்பு ஜல தோஷங்கள், வலிப்பு அலைகளுக்கு கைகண்டமருந்து என் கேட்லாக்கில் கண்ட அனுமானப்படி உபயோகப்படுத்தவேண்டும். சீசா 1 க்கு அணு 0—8—0 ஒன்று முதல 6 சீசாவரையில் வி. பி. செலவு அணு 0—5—0 பிரத்தியேகம்.

**3 சஞ்சீவி மாத்திரைகள்.**

குழந்தை பிறந்து முதல் 3 மாசம்வரையில் மலக்கட்டு சளி இருமல் பால்மந்தம் களைப்பு தோஷம் தலைப்பாரம் சொரம் மயக்கம் வாந்தி விஷஜொரம் சிசுவயிற்று உப்பிசம் வயிற்றுவலி தெற்கத்திகளை முதலிய நோய்கள்தீரும் அறைக் குழந்தைகள் முதல் யாவரும உபயோகிக்கலாம்.

சீசா 1க்கு விலை அணு 0—8—0

முதல் 6 சீசாமுதல் வி, பி. செலவு அணு 5 பிரத்தியோகம்

**4 மாந்தகுணசஞ்சீவிஎன்னும் முசுடு முட்டை தைலம்.**

4. குழந்தை பிறந்து முதல் உபயோகிக்கலாம் ஜனி இசுவயிற்று இழுப்பு நாக்குமுசல் வலிப்பு தோஷம் கணைகைகால் இழுப்பு இன்னும் உள்ளுக்கும்மேலுக்கும் உபயோகப்படுத்தலாம், என்டேரேஷன்படி உபயோகிக்கவேண்டும்.

சீசா 1 விலை அணு 1—0—0—

1 முதல் 3 வரையில் வி, பி. செலவு அணு 0—5—0 பிரத்தியேகம்

**5 மநோரஞ்சித வீரிய விருத்தி குளிகை.**

இந்தக்குளிகை நூதனமாக கண்டுபிடித்தது. தளர்ந்து மெலிந்ததேகத்தை இறுக்கும். நரம்புகளுக்கு மிகவும் பலம் உண்டு பண்ணும். தளர்ந்து போன நரம்புகளை கெட்டி செய்யும் இழந்த தாதுவை வளரச்செய்து கெட்டிப்படுத்தும். மூளையின் கொதிப்பைத் தணித்து ஞாபகசக்தியை உண்டுபண்ணும். தேகத்தை வளர்ப்பித்து தாதுக்களை விருத்திப்படுத்தும்.இக்குளிகையைஒருதரம் வரவழைத்து அனுபோகத்தால் நன்ருய் தெரிந்துகொள்ளலாம். அநேகவிதமான மாத்திரைகளும் குளிகைகளும் லேகியங்களும் வாங்கி சாப்பிட்டு இருப்பீர்கள். கனவான்களே இக்குளிகைபால் இராது. நிச்சயம் டப்பி 1 க்கு ரு 2—0—0 வி. பி. செலவு 1 முதல் 3 வரையில் வி. பி. செலவு பிரத்தியேகம்.

பி சுப்பராயின் அபூர்வ
ஆயுர்வேத அவுஷதங்கள்.

ஓமம்வாட்டர்—இது சாதாரணமாய்க் கடைகளில் பெரிய சீசாக்களில் விற்கும் ஓமம்வாட்டரல்ல. எம்மால் தயாரிக்கும் டிை ஓமம்வாட்டர் அரை அவுன்சு சீசாக்களில்விற்கப்படுகிறது. இதைத் துளிகள் கணக்காவே உபயோகித்தால் போதுமானது. இச்சிறு சீசாவிலுள்ளதை இருபத்துநாலுஅவுன்சு சுத்தசலத்துடன் கலந்துகொண்டால் கடைகளில்விற்கும் ஓமம்வாட்டரைவிடச் சிறந்த ஓமம்வாட்டரைத்தரும். வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி அக்கினிமாந்தம் அசீரணபேதி இவைகளுக்குக்கொடுத்தால் சவுக்கியமாகும் சீரணசக்தியை அதிகரிக்கும் கலரு வன்னும்வாந்திபேதி ரோகத்திற்கு இதைக்கொடுத்துத் தருந்தகுணத்தைக் கண்டுகொண்டு, விலைசீசாஒன்றுக்கு அணு எட்டு. வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்

தாம்பூலவிநூரம்—தாம்பூலந் தரிப்பவர்களுக்குஅதிஅவசியமானமணக்களிப்புண்டாகக்கூடிய வாசனைக் கலவை விலை டப்பா ஒன்றுக்கு அணு ரூ வி பி செலவு ஒன்றுமுதல் பன்னிரண்டு டபாக் கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

காடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால்நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில்விற்கும் வெல்லப்பாகைகலந்த தண்ணீர்போன்றதேனல்ல, இத்தேன் மிகவும்தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவுமிருக்கும் கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்தியசாஸ்திர முறைப்படிக்கு எங்களால்சுத்தியும்செய்யப்பட்டு விற்கப்படுகிறது. கடைகளில்விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிட்டத்தில் நம்மால் விற்கப்படும் தேன் 4 துளிகள் உபயோகித்தால் போதுமானது இப்படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும், சரக்கு இடைப்பதரிது. மருந்துகளை இத்தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின்வீரியமும், குணமும் அதிகரிக்கச்செய்யும்.

விலை டின் 1-க்கு அணு 12 ஒன்று அல்லது இரண்டு டின்கள்வரையிலனுப்ப வி. பி. செலவு5 அணு பிரத்தியேகம்.

1. தாதுபுஷ்டிமருந்து—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்குறிதுவளல், பசியின்மை, கண், கால்எரிவு, தேகவரட்சி சிக்காதில்ஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம்,கை,கால்.இடுப்புமுதலிய அவயவங்களில்சோர்வு, வலி மேகச்சூடு, சோம்பல், பாண்டு,சோகை,மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம்,சதையடைப்பு இன்னும் பற்பல மூத்திரரோகங்களைப்போக்கும்.சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி தாதுவிருத்தியை யுண்டாக்கும். தாதை கெட்டிப்படுத்தும். டப்பா 1-க்கு விலை ரூபா 2 வி,பி, செலவு அணு 5 பிரத்தியேகம்

2 அக்கினிமாந்தந்திர்த்தமருந்து—பசியின்மை புளித்தஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி வாய்நாற்றம், அஜீரணம். வயிற்றுப்பிசம் நித்திரையில்லாமை, பித்தஉபத்திரவங்களைச்சொஸ்தப்படுத்தும். பசிநீபணமும்தேகஆரோக்கியமுந்தரும். டப்பா 1—க்கு அணு 8. வி. பி, செலவு 1 அல்லது 2 டப்பாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்,

3 பிரமேகநிவாரணி—எந்தக்காரணத்தினுல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை நீர்குத்தல், நீர்தாரை எரிவு, சிழ், ரத்தம்வடிதல்முதலிய வியாதிகளை ஆண்பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1—க்கு விலைரு 1 ம். வி.பி. செலவு1முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

4 லக்ஷ்மீகாகஸ்தூரிமாத்திரைகள்—தாம்பூலந்தரிப்பவர்கள்கைபிருப்பில் எப்பொழுதும்வைத்துக்கொள்ளவேண்டியவிலையுயர்ந்தவஸ்து. தந்த்நோய் வாய்நாற்றம், அஜீரணம். பித்தவாய்த இவைகளை நீக்கும், தாம்பூலத்துடனுவது வியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்தசாப்பாட்டையும் உடனேஜீரணம்செய்வதுடன் வாயில் அனேகமணிநேரம் சுகந்தவாசனையிருக்கும் பிரதிதினம்காலையில் 2 மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்தஅக்கினிமந்தம், மலச்சிக்கல்,அஜீரணத்தினுலுண்டாகும் வயிற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன், உபயோகித்துவந்தால் சன்னிகிட்டநாடாது சன்னியில் கொடுக்கச் சன்னிதீரும். இதிலேசலாகிரிமுதலானயாதொருஅபாயகரமானவஸ்துவில்லை. காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்துச்சாமான்களும் வாசனைத்திரவியங்களுஞ்சேர்த்துச்செய்யபபட்டிருக்கிறது. தாம்பூலத்துடனுபயோகித்தால் பச்சைக்கற்பூரம்முதலாகிய வாசனைவஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அநாவசியம், அறையிற் குழந்தைகள்முதல் வயதுசென்றவர்களுக்குச் சளி, இருமல் காசம் காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்குந்தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள்வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச்சுகமாகும். சீசா 1—க்குவிலைஅ இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள்வரையில் அனுப்பபாக்கிங்குதபால்சார்ச அணு5ம் சிலோனுக்கு அணு 7ம் பிரத்தியேகம்.

எனது விலாசம்
பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

☞ MY ADDRESS
P. SUBBRAOY
Ayurvedic Pharm
Sri Venkedasa
Perumal Koil
Sannay
Tanjore

'VENUS' என்னும்

## ஆனந்த சுக தயிலம்.

தப்பாது வாதையைத்தீர்த்து ஆரோக்கிய கொடுக்கும்.

இது வாதம், உளுக்கு, பிடிப்பு முதலிய தசை நரம்புச் சுளுக்குகளையும் கரப்பன், புண், சொறி, கடிப்பு ஆகியவும் கிருமிகளாலாகிய கோய்களையும் சிறு வெட்டுக்காயங்களையும் தப்பாது மாற்றக் கைகண்ட தயிலம்.

விலையோ சொற்பம். குணமாக்கும் சத்தோ சொல்லற்கரிது.

ஒருமுறைபாவித்தாலொருபோதும் குறைகூறார்.

இது வீண்புறையுறைதலல்ல.

விலை செப்பு ஒன்று சதம் 75

Obtainable from
S. Bastianpillai
"RiverBank"
Lindula
Ceylon

**Testimonial**

"அருமருந்தான திருமருந்துத் தயிலம் அம்புவியோர் ஆசிக்கும் ஆனந்த சுக தயிலம்"

இத்தயிலமானது எவ்வித நரம்புச் சுளுக்கு, நோவு, வாதம், கைகால்பிடிப்பு, தலையிடி ஆதியாம் நோய்களை ஆதவனைக்கண்ட அரும்பனி போலப் பூரியவுடன் புகையாய்மாற்றிவிடும். கைகண்டமருந்து என்னநுபவத்தில் யான் இதை ஆருக்கும் அதிகம் களிப்புடனும் ஆனந்தத்துடனும் அறிவிக்கினறேன்.

பி. மரியநாசம்
போஸ்மாஸ்றர்.

## இரவில் மணிபார்க்கும் 8 மூலை ரேடியம் றிஸ்லெட் கெடியாரம்.

இரவில் மணி பார்ப்பதற்குஇக்கெடியாரத்திற்கு விளக்குமுதலிய வேறு வெளிச்சம் வேண்டியதில்லை. இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை கெம்பர்களிலும் முள்களிலும்சேர்த்திருப்பதால் இரவில் மணி நன்றாய்த் தெரியும். இருட்டு எவ்வளவு கருக்கலாய் இருக்குமோ அவ்வளவிற்கும்



மூலையில்லாத ரவுண்டுரிஸ்லெட் ரேடியம் கெடியாரம்
1-க்கு 6-80



8 மூலை நிக்கல றிஸ்லெட் ரேடியம் கெடியாரம்
1-க்கு ரூபாய் 7 8-0

எண்கள் நன்றாய்த்தெரியும் இது சரியான டைம் காட்டக்கூடியது. இதைப்பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவோர்கள் வெகு அழகாய் இருக்கும் உயர்ந்த தோல் பட்டையுடன் அனுப்பப்படும்.

சாகவசம் கொஞ்சந்தான் இருக்கிறது. உடனே தருவித்துக்கொள்ளுங்கள்.

**மானேஜர் தைரியலக்ஷ்மி அண்டு கம்பேனி.**
போஸ்ட் பாக்ஸ் 625நெ. மதராஸ், (A. T.)

## கோடைகாலத்திற்கு !!!

என்னதேவையோ அதை தேடிக்கொள்ள வேண்டும்.

## சர்வதேஸ் விஷசஞ்சீவி.

(ரிஜிஸ்டர்ட்)

—×0×—

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேஸ் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள் இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேணடியது ஏனென்றால் ஓர் மனிதன் இரவில் 12 மணிக்கு நித்திரையில்

1920 வருஷத்திய காலண்டர் இலவசம்.



இனாம் 100 ரூபாய்.

விஷக்கீண்டிவிட்டால் அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதநகாக இவ்விஷசஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை 1 பாக்கெட் அணு 0-8-0
விலை 12 பாக்கெட் ரூபா 5-0-0

**வி. எ. எஸ். பாணி.**
நெ 3, இருளப்பன் தெருவு, மதராஸ்.

## கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

## நாணயமான ஜவுளிகள் கிடைக்கும்.

இந்தியா மகமதியர்களுக்கு தேவையான மாதிரி ஜவுளிகள் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு சகாயமாய் கிடைக்கும்.

எல்லாரும் வி. பி. யில் வாங்கலாம்.

இந்தியா, சிலோன். பர்மா, சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா, மலாய்நாடு, ஆபிரிக்கா. டிருன்ஸ்வால், நெட்டால், பிஜிதீவு, முதலிய தேசங்களுக்கு ஜவுளி தினுசுகள் அனுப்பும்.

**தனலெக்ஷிமி சுதேசி ஜவுளி மாளிகை.**

அம்மன் சன்னதி தேருவு.

தந்திவிலாசம். Murahri Madura. } மதுரை. தென்இந்தியா.

## மலேறியாணுக்கம்பனி.

மங்களூர் தென்கனற.
**1892 ம் ஆு திறக்கப்பட்டது.**

### மலேறியாணு.

காட்டுக்காய்ச்சல் என்னும் விஷசுரத்தையும் அதால்வரும் வருத்தங்களையும் நிச்சயமாயும் சீக்கிரமாயும் மாற்றும். 8 அவுன்ஸ் (32 முறை பாவிக்கக்கூடியது. ரூபா 1—அணு—8.
4 அவுன்சு—14.

### மல்றின்.

இது மிகச்சித்தியான விஷசுரசத்துரு. இது மிக அவசரதேவைகளுக்கும் பிரயாணிகளுக்கும் கைகண்டதும் பிரயோசனமுமானது. 25, 50; 100 மாத்திரைகள் அணு 8, அணு—14. ரூபா 1 அணு-8-

### றாமோபாம் தைலம்.

கடூரமான வாதத்திற்கும் வேறு நோவுகளுக்கும் மிகத்திறமான அவுடதம். மிகுதிப்பற்றுய் மெத்தக்கடுமையான நோவுக்கு ஒருமுறை பாவித்தால் குணமுண்டாகும். விலை ஒருசாடி அணு—6
துப்புரவானதும் உண்மையானதும் பழுதற்றதுமான

### யூக்காலிப்றஸ எண்ணெய்.

இது தடிமன், காய்ச்சல், இருமல், தொண்டைநோவு, வயிற்றுக்கோளாறு, குடற்குளப்பம் இவைகளை மாற்றும். ஒரு அவுன்சு புட்டி அணு—5. அரை டசன் ஒரு அணு—10, ஒரு டசன்-3-00

### பன்னிரண்டு திசியூ றிமிட்ஸ் தூள்

| 2 திரும் | 4 திரும் | 1 அவுன்ஸ் | 2 அவுன்ஸ் | 4 அவுன்ஸ் |
|---|---|---|---|---|
| 4 அணு. | 7 அணு. | 12 அணு. | ரூ. 1—6. | ரூ. 2.—8. |

10ரூபாய்க்கு 100 க்கு $6\frac{1}{4}$ வீதமும் 25 ரூபாய்க்கு வாங்கினுல் 100 க்கு 10 வீதமும் 100 ரூபாய்க்கு $12\frac{1}{2}$ வீதமும் கழிவு கொடுக்கப்படும்.

### மனோலாசினி தைலம்.

இது தலைமயிருக்குத் தடவக்கூடிய மகா சிறந்த தைலம். தூக்கமின்மை, தலைநோய், மயிர் கீழ்வடிதல், மூக்கைத்தலை, இன்னும் சிரசு, கண், காது இவைகளைப்பற்றிய பலவித வியாதிகளைக் குணப்படுத்துவதுடன் மயிர் வளரவும் செய்கிறது. ஞாபகசக்தியை விர்த்திசெய்கிறது. தலைகண் எரிச்சலைப்போக்கி குளிர்ச்சியைக் கொடுக்கிறது. தலைமயிருக்கு அழகைக்கொடுக்கிறது. இன்றைக்கே ஒரு சிறு புட்டியைவாங்கி பரீட்சியுங்கள். விலை. ஒரு சிறு பெட்டி அணு 12. மூன்று சிறு புட்டிகள் ரூ. 2 ஓர் பெரிய புட்டி ரூ. 1—6—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

### சின்-சின்-பாம் தைலம்.

இந்த மேலான அபூர்வ ஔஷதத்தை சகலவித நோக்காடு வலிகள் உள்ள ஸ்தானத்தின் வெளிப்புறத்தில்பூசுவதால்ஆரோக்கியமுண்டாகும். விலை ஜாடி ஒன்றுக்கு அணு 6. மூன்று ஜாடி 1-1-0 ஒருடசன்ஜாடி ரூ. 4.

### நாரீ-சக்தி.

இது ஸ்திரீகளுக்கு வரக்கூடிய கிராணி முதலிய பலவித சிக்குமுக்கான வியாதிகளையும் கோளாறுகளையும் சொஸ்தப்படுத்தும். விலை. பெட்டி ஒன்றுக்கு ரூ. 2.

### லங்ஸடோன்.

இந்த மகா வலுவுள்ள அமிர்தமான மருந்து நாட்பட்ட இருமல், காசம், க்ஷயரோகம் ஆகிய வியாதிகளைப் போக்குவதுடன் நரம்பு தேகமும் தளர்ச்சியடைந்த பலவீனருக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். யாதொரு கெடுதியும் செய்யாது. விலை. டின் 1-க்கு ரூ. 2—8—0.

**Pain Oil** for Rheumatism and Paralysis: Rc. 1.

விலாசம்:—

Manollasini Co,
21. Kankanady;
MANGALORE.

மனோலாசினி கம்பெனி
21. கன்கனடி,
மங்களூர்.

Printed and published by S. Tambimuttu puvalhy na.
Gnanapragasa Yanthira office, Atchuvaly, Jaff